# கோலாலம்பூரின் முதல் பெண் மேயர்




கோலாலம்பூர், ஆக. 15- கோலாலம்பூர் மாநகரின் பதினைந்தாவது மேயராக டத்தோஸ்ரீ படுகா மைமூனா முகமது ஷரிப் நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டின் தலைநகருக்கு பெண்மணி ஒருவர் மேயராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும்.

பிரதமர்துறை (கூட்டரசு பிரதேசம்) அமைச்சர் டாக்டர் ஜலீஹா முஸ்தாபா நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

1960ஆம் ஆண்டு கூட்டரசு தலைநகர் சட்டத்தின் 4(2)ஆவது பிரிவின்கீழ் மேயர் பதவிக்கு மைமூனா நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் பதவிக் காலம் இன்று வியாழக்கிழமை முதல் நடப்புக்கு வருகிறது.